# மே – 05 –பாஸ்கா கால 3ம் ஞாயிறு

## "நீ என்மீது அன்பு செலுத்துகின்றாயா?" -யோவான்21:16

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 5 : 27–32,40 – 41

அந்நாட்களில் தலைமைக் குரு அவர்களை நோக்கி,"நீங்கள் இந்த இயேசு பற்றிக் கற்பிக்கக் கூடாது என்று நாங்கள் கண்டிப்பாய்க் கட்டளையிடவில்லையா? என்றாலும் எருசலேம் முழுவதும் நீங்கள் கற்பித்து வருகிறீர்கள். மேலும் இந்த மனிதருடைய இரத்தப் பழியையும் எங்கள்மீது சுமத்தப் பார்க்கிறீர்களே!" என்றார். அதற்குப் பேதுருவும் திருத்தூதரும் மறுமொழியாக, "மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்?. நீங்கள் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்ற இயேசுவை நம் மூதாதையரின் கடவுள் உயிர்த்தெழச் செய்தார்.இஸ்ரயேல் மக்களுக்கு மனம் மாற்றத்தையும் பாவமன்னிப்பையும் அளிப்பதற்காகக் கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்பராகவும் தமது வலப்பக்கத்துக்கு உயர்த்தினார். இவற்றுக்கு நாங்களும் கடவுள் தமக்குக் கீழ்ப்படிவோருக்கு அருளும் தூய ஆவியும் சாட்சிகள்" என்றனர்.இயேசுவைப்பற்றிப் பேசக் கூடாதென்று கட்டளையிட்டு விடுதலை செய்தனர். இயேசுவின் பெயரை முன்னிட்டு அவமதிப்புக்கு உரியவர்களாகக் கருதப்பட்டதால் திருத்தூதர்கள் மகிழ்ச்சியோடு தலைமைச் சங்கத்தை விட்டு வெளியே சென்றார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மைப் புகழ்வேன். ஏனெனில் என்னைக் கைதூக்கிவிட்டீர்

### இரண்டாம் வாசகம் : திருவெளிப்பாடு 5 : 11 - 14

தொடர்ந்து நான் பார்த்துக் கொண்டிருக்கும்போது, அரியணையையும் உயிர்களையும் மூப்பர்களையும் சுற்றிநின்ற கோடிக்கணக்கான வானதூதர்களின் குரலைக் கேட்டேன். "கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையும் செல்வமும் ஞானமும் ஆற்றலும் மாண்பும் பெருமையும் புகழ்ச்சியும் பெறத் தகுதி பெற்றது" என்று அவர்கள் உரத்த குரலில் பாடிக் கொண்டிருந்தார்கள்.பின்பு, விண்ணுலகு, மண்ணுலகு, கீழுலகு, கடல் எங்கும் இருந்த படைப்புகள் அனைத்தும், அவற்றில் இருந்த ஒவ்வொன்றும், "அரியணையில் வீற்றிருப்பவருக்கும் ஆட்டுக்குட்டிக்கும் புகழ்ச்சியும் மாண்பும் பெருமையும் ஆற்றலும் என்றென்றும் உரியன" என்று பாடக்கேட்டேன்.அதற்கு அந்த நான்கு உயிர்களும், "ஆமென்" என்றன. மூப்பர்கள் விழுந்து வணங்கினார்கள்.

### நற்செய்தி : யோவான் 21 : 1 – 19

அக்காலத்தில் இயேசு தம் சீடருக்குத் திபேரியக் கடல் அருகே மீண்டும் தோன்றினார். அவர் தோன்றியது இவ்வாறுசீமோன் பேதுரு, திதிம் எனப்படும் தோமா, கலிலேயாவிலுள்ள கானாவைச் சேர்ந்த நத்தனியேல், செபதேயுவின் மக்கள் ஆகியோரோடு இயேசுவின் சீடர்களுள் வேறு இருவரும் கூடியிருந்தனர், அப்போது சீமோன் பேதுரு அவர்களிடம், "நான் மீன்பிடிக்கப் போகிறேன்" என்றார். அவர்கள், "நாங்களும் உம்மோடு வருகிறோம்" என்று போய்ப் படகில் ஏறினார்கள். அன்று இரவு அவர்களுக்கு மீன் ஒன்றும் கிடைக்கவில்லை.ஏற்கெனவே விடியற்காலை ஆகியிருந்தது. இயேசு கரையில் நின்றார். ஆனால் அவர் இயேசு என்று சீடர்கள் அறிந்து கொள்ளவில்லை.இயேசு அவர்களிடம், "பிள்ளைகளே! மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "இல்லை" என்றார்கள்.அவர், "படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள் மீன் கிடைக்கும்" என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே வீசினார்கள். மீன்கள் மிகுதியாய் அகப்பபட்டதால் அவர்களால் வலையை இழுக்க முடியவில்லை.இயேசுவின் அன்புச் சீடர் அதைக்கண்டு பேதுருவிடம், "அங்கு நிற்பவர் ஆண்டவர்தாம்" என்றார். அதைக்கேட்டவுடன் தம் ஆடையைக் களைந்திருந்த சீமோன் பேதுரு ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார்.மற்றச் சீடர்கள் மீன்களுடன் வலையை இழுத்துக்கொண்டு படகிலேயே வந்தார்கள். அவர்கள் கரையிலிருந்து வெகு தொலையில் இல்லை ஏறக்குறைய நூறு மீட்டர் தொலையில்தான் இருந்தார்கள்.படகைவிட்டு இறங்கியவுடன் கரியினால் தீ மூட்டியிருப்பதையும் அதன்மீது மீன் வைத்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். அங்கு அப்பமும் இருந்தது.இயேசு அவர்களிடம், "நீங்கள் இப்போது பிடித்தவற்றில் சில மீன்களைக் கொண்டு வாருங்கள்" என்றார்.சீமோன் பேதுரு படகில் ஏறி, வலையைக் கரைக்கு இழுத்தார். வலை நிறைய பெரிய மீன்கள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை நூற்று ஐம்பத்து மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லைஇயேசு அவர்களிடம், "உணவருந்த வாருங்கள்" என்றார். சீடர்களுள் எவரும், "நீர் யார்?" என்று இயேசுவிடம் கேட்கத் துணியவில்லை. ஏனெனில், அவர் ஆண்டவர் தாம் என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள்.இயேசு அவர்கள் அருகில் வந்து, அப்பத்தை எடுத்து அவர்களிடம் கொடுத்தார் மீனையும் அவ்வாறே கொடுத்தார்.இவ்வாறு, இயேசு இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு தம் சீடருக்கு இப்போது மூன்றாம் முறையாகத் தோன்றினார்.அவர்கள் உணவருந்தியபின் இயேசு சீமோன் பேதுருவிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்" என்றார்.இரண்டாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்று கேட்டார். அவர் இயேசுவிடம், "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!" என்றார். இயேசு அவரிடம், "என் ஆடுகளை மேய்" என்றார்.மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், "யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" என்று கேட்டார். "உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" என்று இயேசு மூன்றாம் முறை கேட்டதால் பேதுரு துயருற்று, அவரிடம், "ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?"" என்றார். இயேசு அவரிடம், ""என் ஆடுகளைப் பேணிவளர்."நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடிவந்தாய். உனக்கு முதிர்ந்த வயது ஆகும்போது நீ கைகளை விரித்துக் கொடுப்பாய். வேறொருவர் உன்னைக் கட்டி, உனக்கு விருப்பம் இல்லாத இடத்திற்குக் கூட்டிச்செல்வார் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன் " பேதுரு எவ்வாறு இறந்து கடவுளை மாட்சிப்படுத்தப் போகிறார் என்பதைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார். இதைச் சொன்ன பின் பேதுருவிடம், "என்னைப் பின்தொடர்" என்றார்.

**தியானம்:** இறைமகன் இயேசு தனது போதனைக்கெதிராக அல்லது தன்னை மறுதலித்தவர்களையும் மன்னிப்பதோடு, அளவு கடந்த அன்பு செய்கின்றார் என்பதனை நற்செய்தியில் காணுகிறோம். "நீ என்மீது அன்பு செலுத்துகின்றாயா?" என மூன்று தடவை (யோவான் 21:15-17) கேட்டபோது புனித பேதுருவின் மனநிலை எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கும் என நாம் ஊகித்துக் கொள்ளலாம். அவ்வாறான ஒரு கேள்வியையே தமது சாயலாகப் படைக்கப்பட்ட எம்மையும் பார்த்து இன்றைய நற்செய்தியின் ஊடாக இறைமகன் இயேசு கேட்கின்றார். அன்பு செய்வதில் வல்லவரான நன்பா இறைமகன் இயேசு தன்னைக் காட்டிக்கொடுத்த யூதாசை முத்தமிட்டு "நன்பா" என அரவணைக்கவில்லையா? கைது செய்ய வந்தவனின் காதுகளை ஒட்டிக் குணமாக்கி தமது அன்பை வெளிப்படுத்தவில்லையா? சிலுவையில் உயிர்பிரியும் வேளையிலும் "பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்" என ஏங்கிக்கண்ணீர் விடவில்லையா? இறைமகன் இயேசுவின் அன்பால் விபச்சாரிகள், பாவிகள் மட்டுமல்ல சிலுவையில் இறக்கும் தறுவாயில் இருந்தவனும் மனம் திரும்பவில்லையா? எம்மத்தியில் நடப்பதென்ன? பயங்கர மிருகங்களிலிருந்து பாதுகாக்கத் துப்பாக்கிகள் தயாரித்தோம். இன்று பயங்கர மிருகங்கள் செல்லப்பிராணிகளாகிட, சகோதரனை எதிரி என்று அவனது உயிரைவிட துப்பாக்கிச் சன்னத்தின் மதிப்பைப் பெரிதாக்குகிறோமே. இதுதான் இறைவனது சாயலாக எம்மைப்போல படைக்கப்பட்ட அடுத்தவர் மீது நாம் காட்டும் அன்பா? இதுதான் மனிதாபிமானமா? அல்லது இதுதான் எமது மன்னிக்கும் மனப்பாங்கா? உண்மையை உணர்ந்து ஏற்றுக்கொள்வோம். இறைமகன் இயேசு எம்மீது தமக்கிருந்த அன்பை வெளிக்காட்டவே சிலுவைச்சாவை ஏற்றுக்கொண்டார் என நம்பி விசுவசிப்போம். ஏனெனில் அன்று புனித பேதுருவிடம் "நீ என்மீது அன்பு செலுத்துகின்றாயா?." என்று கேட்டவேளையில் துயருற்று "ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே"(யோவான் 21:17) என்று பதில்கூறினார். மாறாக நாமோ "இவனைச் சிலுவையில் அறையும்"என்றா பதில்கொடுக்கப் போகின்றோம்?. எனவே, அவ்விதமான செயற்பாட்டில் நாம் நிலைத்திருக்க அன்னை மரியாவின் வணக்க மாதமான இந்த மாதத்தில் உறுதி எடுப்போம்.